செ.வெ.எண்: 07 நாள்: 05.08.2019

**கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சு.பிரபாகர் இ.ஆ,ப. அவர்கள் தலைமையில் இன்று ( 05.08.2019) நடைபெற்றது.**

**மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக தலா ரூ.1,100- மதிப்பில் மொத்தம் 10- பயனாளிகளுக்கு ரூ. 11,000 மதிப்பிலான பார்வையற்றோர்க்கான ப்ரெயிலி வாட்ச் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இன்று வழங்கினார்.**

**8- வயது சிறுவன் தலசீமா நோய்க்காக சிகிச்சை பெறுவதற்காக முதலமைச்சர் அவர்களின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டத்தின் கீழ் ரூ. 15 லட்சம் க்கான மருத்துவ காப்பீடு அட்டை மற்றும் போக்குவரத்து செலவினத்திற்காக மாவட்ட ஆட்சியர் விருப்ப நிதியிலிருந்து ரூ. 10 ஆயிரம் -**

**பாரத பிரதமரின் தூய்மை பாரத இயக்கத்தின் கீழ் சிறப்பாக பணியாற்றிய குழுக்களுக்கு ரொக்க பரிசு, கேடயம் மற்றும் சான்றிதல்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இன்று ( 05.08.2019) வழங்கினார்.**

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சு.பிரபாகர் இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் இன்று (05.08.2019 ) நடைபெற்றது. இக்குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்கள் குடிநீர் வசதி, மின்வசதி, பட்டா வேண்டியும், கல்வி உதவித் தொகை, ஓய்வூதியத் தொகை, இலவச தையல் எந்திரம், சலவைப் பெட்டி, வேண்டியும் மற்றும் சாலை வசதி வேண்டியும், மின் இணைப்பு, வீட்டுமனைப்பட்டா, பல்வேறு கோரிக்கைகள் உள்ளிட்ட என மொத்தம் 321 - மனுக்களை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுரை வழங்கினார்.

பாரத பிரதமரின் தூய்மை பாரத இயக்கத்தின் கீழ் சிறப்பாக பணியாற்றிய குழுக்களுக்கு (நேருயுகேந்திரா இளையோர் மையம் சார்பாக) மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் குழு தேர்வு செய்யப்பட்ட மூன்று குழுக்களான , கருக்கனஅள்ளியை சேர்ந்த மகாத்மா காந்தி இளைஞர் நற்பணி மன்றத்திற்கு முதல் பரிசாக ரூ. 30 ஆயிரத்திற்க்கான காசோலை மற்றும் கேடயம், சான்றிதலையும், இரண்டாம் பரிசாக திம்மாபுரத்தை சேர்ந்த சுவாமி விவேகானந்தா நற்பணி மன்றத்திற்கு ரூ. 20 ஆயிரம் காசோலை, சான்றிதல் மற்றும் கேடயம், மூன்றாம் பரிசாக பாறைகொட்டாய் ஏ.பி.ஜே. அப்துல்கலாம் நற்பணி மன்றத்திற்கு ரூ. 10 ஆயிரத்திற்கான காசோலை, சான்றிதல் மற்றும் கேடயங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இன்று வழங்கினார்.

மேலும் கிருஷ்ணகிரி புதிய வீட்டு வசதி வாரிய குடியிருப்பை சேர்ந்த திரு.கிருஷ்ணமூர்த்தி என்பவரின் மகன் கௌதம் வயது - (08) தலசீமா நோய்க்காக சிகிச்சை பெறுவதற்காக முதலமைச்சர் அவர்களின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டத்தின் கீழ் ரூ. 15 லட்சம் க்கான மருத்துவ காப்பீடு அட்டையும், மற்றும் மாவட்ட ஆட்சியர் விருப்ப நிதியிலிருந்து மருத்துவ மணைக்கு சென்று வர செலவினங்களுக்காக ரூ. 10 ஆயிரத்தையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக தலா ரூ.1,100/- மதிப்பில் மொத்தம் 10- மாணவ மாணவியர்களுக்கு ரூ. 11,000 மதிப்பிலான பார்வையற்றோர்க்கான ப்ரெயிலி வாட்சகளையும், சூளகிரி வட்டம் மைலேப்பள்ளி ஊராட்சி செம்பரசனப்பள்ளி சேர்ந்த கிருஷ்ணப்பா மின்சாரம் தாக்கி இறந்ததால் அவரது வாரிசுதாரான மனைவி திருமதி.ஷோபா என்பவருக்கு, முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ. 1 ___ லட்சத்திற்கான காசோலையும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இன்று வழங்கினார்.

தொடர்ந்து வருவாய் துறையில் கிராம நிர்வாக உதவியாளராக பணிபுரிந்து பணி காலத்தில் மரணமடைந்த ராஜகோபால், மற்றும் முனியப்பா ஆகியோரின் வாரிசுதாரர்கள் திரு.நாகராஜன், திரு.நாகேஷ் ஆகியோருக்கு பதிவறை எழுத்தர் மற்றும் அலுவலக உதவியாளர்க்கான பணிநியமன ஆணைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இன்று வழங்கினார்.

இந்நிகழ்ச்சியின் போது மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.எஸ்.சாந்தி, மாவட்ட ஆட்சியர் நேர் முக உதவியாளர் ( பொது) திரு.ராமமூர்த்தி, தனித் துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திரு.குணசேகரன், மாவட்ட ஆதிதிராவிடர் நலத் துறை அலுவலர் திரு.சேதுராமலிங்கம், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.சந்திரசேகர், உதவி ஆணையர் ( ஆயம்) திரு.முரளி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அலுவலர் திரு. அமீர்பாஷா, நேருகேந்திரா மாவட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. நா.திருநீலகண்டன், மற்றும் அப்துல்காதர், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அலுவலர் திரு.மகிழ்நன், தாட்கோ மேலாளர் திரு.பி.சி.சுந்தரம், மற்றும் அரசு துறை அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு: - செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**கிருஷ்ணகிரி.**